Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.267/2015

**Depositions of PW- 9**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.சுந்தரபாண்டியன் | Occupation | காவல் ஆய்வாளர் |
| Father's name | கார்த்திகைநாதன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of February 2026.

19.02.2026

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது இடைக்கால் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் வன்னியம்பட்டி காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த இதற்கு முன்னர் நான் வன்னியம்பட்டி காவல்நிலைய காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 14.04.2013 அன்று சார்பு ஆய்வாளர் சதீஷ்பிரபு அவர்கள் நிலைய வன்னியம்பட்டி காவல்நிலைய பொறுப்பிலிருந்தபோது முரளி என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப வன்னியம்பட்டி காவல்நிலைய குற்ற எண்.114/2013 பிரிவுகள்.457, 380 இதச வழக்கு பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அசாஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. காவல் ஆய்வாளர் மகேந்திரபாண்டியன் அவர்கள் மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 18.30 மணியளவில் சாட்சிகள் சக்திவேல்ராஜா, வேல்முருகன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். **வரைபடம் அசாஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் முரளி, விஜயராகவன். உமாமகேஸ்வரி, சித்ரா, ஈஸ்வரன், சத்யராஜ், முனீஸ்வரன், கருப்பையா, முருகையா ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்னர் இவ்வழக்கின் விசாரணை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். பின்னர் எதிரிகளை தேடிவந்த நிலையில் 06.08.2014 அன்று ஆர்டிஓ ஆபிஸ் அருகே சந்தேகத்திற்கிடமாக நின்றிருந்த ஒருவரை விசாரித்தபோது அவர் பெயர் முத்துராசு என்றும் அவர் முன்னுக்குபின் முரணாக கூறியதால் அவரை காரணம் கூறி கைது செய்து அவர் தானாக முன்வந்து சாட்சிகள் வைரமுத்து மற்றும் சுரேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதன் மூலம் எதிரி முத்துக்குமார் இவ்வழக்கில் சம்மந்தப்பட்டவர் என்பது தெரியவந்தது. பின்னர் எதிரி மற்றும் சாட்சிகளுடன் சங்கரின் வீட்டிற்கு சென்று எதிரி எடுத்து கொடுத்த இவ்வழக்கின் சொத்துக்களை அத்தாட்சியின் பேரில் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி வாக்குமூலம் பதிவு செய்தேன். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ.11 ஆகவும், அத்தாட்சி அசாஆ.12 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் 24.09.2014 ம் தேதியன்று எதிரி முத்துக்குமார் பிடி வாரண்ட் மூலம் வன்னியம்பட்டி காவல்நிலையம் அழைத்து வந்து விசாரித்தபோது எதிரி தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை வேலாயுதம், அருணாச்சலம் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். பின்னர் எதிரி மற்றும் சாட்சிகளுடன் மம்சாபுரத்திலுள்ள எதிரியின் வீட்டிற்கு சென்று எதிரி எடுத்துக்கொடுத்த வழக்கு சொத்தை அத்தாட்சியின் பேரில் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரி முத்துக்குமாரின் ஒப்பதல் வாக்குமூலத்திலிருந்து காளிமுத்து, முனீஸ்வரன் மற்றும் குருசாமி ஆகியோரும் இவ்வழக்கில் சம்மந்தப்பட்டது தெரியவந்தது. அவர்கள் ஏற்கனவே ராஜபாளையம் போலீசார் கைது செய்ததால் சம்பிரதாய கைது செய்தேன். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. முத்துக்குமார் அத்தாட்சி அசாஆ.14** பின்னர் கைப்பற்றிய பொருட்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **படிவம் 91 (2 எண்ணம்) அசாஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

இத்துடன் எனது விசாரணை முடித்து 08.12.2014 ம் தேதியன்று எதிரிகள் மீது பிரிவுகள்.454, 457, 380 இதச வின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

புகார் மனுவில் மேற்படி காணாமல் போனதாக கூறப்படும் பொருட்களின் நிறம் மற்றும் பிராண்ட்ன் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். காணாமல் போன பொருட்கள் சம்மந்தமாக மேற்படி கம்பெனியில் வேலை செய்யும் நபர்களிடம் விசாரணை செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் ஜன்னல்கள் கதவுகள் போன்றவை உடைக்கப்பட்டிருந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் புகார் மனு பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜர், வரைபடம், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி போன்ற ஆவணங்கள் வழக்கிற்காக காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. இவ்வழக்கினை சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் குற்ற இறுதியறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.